# பாதுகாவலன்

PATHUKAVALAN

23-11-1989

இவ்வாரவிநியோகம்2

| | |
|---|---|
| ...வைஷ்யூர் | 500 |
| மாதகல் பங்கு | 207 |
| பேசாலைப் பங்கு | 200 |
| நாவாந்துறைப்பங்கு | 150 |
| ஆனைக்கோட்டை | 135 |
| இரணைதீவு, வலைப்பாடு | 130 |
| செக்கடித்தெரு பங்கு | 120 |
| யாழ்புனிதயுவானியார் | 115 |
| நாரந்தனைப் பங்கு | 111 |
| யாழ் O. L. R. | 110 |
| கிளிநொச்சி | 100 |
| உரும்பிராய்பங்கு | 95 |
| ஊர்காவற்றுறைபங்கு | 84 |
| மிருசுவில் பங்கு | 80 |
| மொத்த விநியோகம் | 8400 |

மலர்: 115 இதழ் : 40 27-10-1989 (ஒக். 27 — நவம்பர். 3) ரூபா 1-50— இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

★ பேரழிவை ஏற்படுத்தும் காரணிகளை நாம் உருவாக விடக்கூடாது

★ கடந்த கால நிகழ்ச்சிகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம்

## போரைப்பற்றி சிந்திக்குமாறு நல்லெண்ணம் கொண்ட அனைவரையும் அழைக்கிறேன்

—திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்

நாடுகளை கண்டபடி பிளவுபடுத்துவது, மக்களை பலவந்தமாக இடம் பெயரச்செய்வது, அளவற்ற படைக்கலப்பெருக்கம், நவீன ஆயுதங்களின் கட்டுப்பாடற்ற பிரயோகம், மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுதல், சர்வதேச சட்டங்களை மீறுதல், சர்வாதிபத்திய கொள்கைகளைத் திணித்தல் ஆகிய செயல்கள் மனுக்குலத்தின் அழிவுக்கே இட்டுச்செல்லும் என்பதை நாம் அனுபவ ரீதியாகக் கண்டுள்ளோம்.— உலக மகாயுத்தம் ஆரம்பித்த 50 ஆண்டு நிறைவில் திருத்தந்தை விடுக்கும் செய்தி.

இது போன்ற பேரழிவை ஏற்படுத்தக் கூடிய காரணிகளை உருவாக விடக்கூடாதென்பதை கடந்தகால நிகழ்ச்சிகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1939 செப்டெம்பர் 1 ஆம் திகதி ஆரம்பித்த யுத்தம் உலக வரலாற்றிலேயே அழிவு மிக்கதும், மனிதத்தன்மையற்றதுமான ஓர் அவலமாகும். ஐரோப்பா முழுவதும், ஜேர்மன் படைகளால் கைப்பற்றப்பட்டு போர் ஆபிரிக்காவரை பரவியபோதும், ரஷ்யாவின் எதிர்த்தாக்குதலினால், கடுமையான போராட்டத்தின் பின் ஜேர்மனி முற்றாக நசுக்கப்பட்டபோதும் இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் சொல்லொணுத் துன்பத்துக்கு ஆளானார்கள்.

கிழக்கில் ஹிரோஷிமா, நாகசாக்கி நகரங்களின் மீது அணுக்குண்டு வீசப்பட்டதால் ஜப்பான் 1945 ஆகஸ்ட் 10 -ம் திகதி சரணடைந்தது.

நிலம், நீர், ஆகாயம் ஆகிய மூவிடங்களிலும், உலகம் முழுவதிலும் இந்த யுத்தம் நடைபெற்றது. முழு நகரங்கள் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டன. பீதி கொண்ட மக்கள் தாங்கொணுத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. திருத்தந்தை 12 ஆம் பத்திநாதரின் முயற்சியாலேயே ரோமாபுரிக்கு வந்த ஆபத்து நீங்கியது.

ஐந்தரைக் கோடி மக்களின் உயிரைப் பலிகொண்ட இந்த யுத்தத்தின் பின் ஐரோப்பாவை மீண்டும் கட்டியெழுப்பவேண்டியிருந்தது. வெற்றிபெற்றவர்களோ தம்முட் பிளவுபட்டிருந்தனர்.

முழுத்திருச்சபையின் மீதும், மனுக்குலத்தின் மீதும், கொண்ட கரிசனையினால், மக்களை பாதாளத்திற்கு இட்டுச் சென்ற இப்போரைப் பற்றி சிந்திக்குமாறு நல்லெண்ணம் கொண்ட அனைவரையும் அழைக்கின்றேன்.

### 'கிறிஸ்மஸ் சிறப்பிதழ்'

எழுத்தாளர்களே !

'கிறிஸ்மஸ் சிறப்பிதழு'க்கான உங்கள் ஆக்கங்களை 30-11-89ற்கு முன் 'பாதுகாவலன்' அ பெ. இல. 2யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். (ஆ—ர்)



## கிராமத்து இளைஞருக்குத் தொழிற் பயிற்சி

கண்டி மறைமாவட்டத்தின் சமூக பொருளாதாரப் பயிற்சி நிலையம் ஏற்றுமதிக்காக பொருட்களை உற்பத்திசெய்யும் தொழில் நிலையங்களை ஆரம்பித்து நடத்தி வருகிறது.

''தோற்தொழில் உற்பத்தி நிலையங்கள் கிராமத்து இளைஞர்களுக்கு ஒரு புதுவாய்ப்பை அளித்துள்ளது. இனமத வேறுபாடின்றி தொழிற்சாலைக்குப் பக்கத்திலுள்ளவர்களே பயிற்சிக்கு எடுக்கப்படுகின்றனர்.'' என செற்றிக் நிறுவனத்தின் இயக்குநரான பிதா ஒஸ்வால்ட் போத் கூறியுள்ளார்.

இந்த ஏற்றுமதி உற்பத்தி நிலையங்கள் கிராமங்களில் புதிய தொழில் நுணுக்கங்களை அறிமுகம் செய்வதுடன், தமது வீட்டையும் குடும்பத்தவரையும் விட்டு இளைஞர் நகரங்களை நாடிச் செல்லவேண்டிய அவசியத்தையும் நீக்குகிறது.

நகரங்களிலும், சுதந்திர வர்த்தகவலயத்திலும், தொழில் புரியும் பெண்கள் தமது சம்பளத்தின் பெரும் பகுதியை பிரயாணத்திற்கும், உணவிற்கும், இருப்பிடத்துக்கும் செலவிடவேண்டியிருக்கிறது. கிராமத்தில் அவர்களுக்கு வீட்டில் சாப்பிடக் கூடியதாயிருப்பதோடு, குடும்ப உறவுகளும் பேணப்படுகின்றன.

பல்வேறு சமயங்களையும், கலாச்சாரங்களையும் கொண்ட இளைஞர்களை ஒரு பொதுநோக்கத்திற்காக உழைக்க வைப்பதும் இத்தொழில் நிலையங்களின் நோக்கமாகும்.

தோற்தொழிலில் பயிற்சியளித்துவரும் ஆஸ்திரேலிய நிபுணரான கார்ல் பால்சர் கெற்றம்பே திருக்குடும்பக்கன்னியர் மடத்திலுள்ள ஒரு கராஜையே பயிற்சி நிலையமாகப் பயன்படுத்துகிறார். இவர் இலங்கை இளைஞர்களின் திறமையைப் பாராட்டுகின்றார்.

''சமூக நோக்கங்கள் எவ்வாறிருப்பினும், ஒரு தொழில் இலாபகரமானதாக இருந்தாலே அது தொடர்ந்து நடைபெற முடியும். குறைந்த மூலதனமும், கூடிய மனித உழைப்பும் தேவைப்படும் தொழில்களே இன்று எமது நாட்டுக்குப் பொருத்தமானவை'' என பிதா பேர்த் கூறுகின்றார்.

## வீடற்றோர் பிரச்சனை பற்றி கருதினல் ஸின் கருத்து வேறுபாடு

மணிலாவில் அரசாங்கம் வீடமைப்புக்கு · எடுத்துவரும் முயற்சிகள் போதாதவை என கருதினல் ஜைமேசின் கூறியதை ஜனுதிபதி அக்வீனே தமது வாராந்த வானெலி செய்தியில் மறுத்துள்ளார்.

மூன்று மில்லியன் மக்கள் வீடற்றோராய் செல்வந்தர் எறியும் பொருட்களை சேகரித்து சீவனம் நடத்த மர வண்டிகளுடன் திரியும் போது செல்வந்தரும் இராணுவத்தினரும் ஆடம்பர மோட்டார்களில் நடமாடுவது இழிவான செயல் என கருதினல் சின் குறிப்பிட்டார்.

வீடற்றோருக்கு இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதில் அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் மேற்கொண்டுள்ள திட்டங்கள் அற்ப அளவு நன்மையே செய்துள்ளன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### கூட்டுத் திருப்பலி
### 6-11-1989

யாழ்ப்பாணம் மறைவட்டத்தில் தொண்டாற்றி இறந்து போன ஆயர்கள், குருக்கள், துறவியர்களது ஆன்ம இளைப்பாற்றிற்காக வழமையாக வருடந்தோறும் ஒப்புக் கொடுக்கப்படும் கூட்டுத் திருப்பலி இம்முறை 6-11-1989 திங்கட்கிழமை பி. ப. 5-30 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் நடைபெறும்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம் கருத்து

### ஆயர் மன்ற கோரிக்கைகளும் நாட்டு நிலைமையும்

வன்செயல் வன்செயலைத்தான் தூண்டும் என்பதை நாம் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளோம்.

எமது நாட்டு நிலைமைகளை நாம் இங்கே விளக்க வேண்டிய தேவையில்லை.

எல்லா வீட்டிலும் ஏதாவது ஒரு இழப்பும், எல்லா ஊரிலும் ஏதாவது ஒரு அழிவும் நடந்து தான் உள்ளது என்றால் அது உண்மையாகத்தான் இருக்கும்.

அதிகம் அப்பாவிகள் அழிக்கப்பட்டார்கள் என்பதும் உண்மை. தமிழ் மக்களாகிய நாம் எமது சொத்தாக வெறும் மண்டை ஓடுகளையும், எலும்புக் கூடுகளையும் தான் சம்பாதித்துள்ளோம்.

விடுதலை வேண்டாம் ''விடு–தலையை'' என்ற நிலைக்கு நாம் வருகின்ற அளவாக போர் நம்மை ஆட்டி அலைக்கழித்து விட்டது.

'அவரையும் இவரையும்' நம்பி மனித மாண்பையே பறிகொடுத்து விட்டோம். எல்லோருடைய முகங்களின் பின்னும் சுயநலங்கள்தான் பெரிது என்பதைக் கண்டுவிட்டோம்.

எல்லோருடைய ஏக்கமும் இனி என்றாலும் அமைதியான, பாதுகாப்பான, சுதந்திரமான வாழ்க்கை நிலை வராதா என்பதாகும்.

யாரையும் குறைகூறி நாம் எதையும் சம்பாதிக்கப் போவதில்லை, ஆக்கபூர்வமாக நாம் இப்போ என்றாலும் என்ன செய்யலாம் என்பதை யோசித்து செயற்படுத்த வேண்டும்.

கத்தோலிக்க ஆயர் மன்றம் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தனது கோரிக்கைகளையும், பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளது.

எங்களுககாக குரல் கொடுக்க யாருமில்லையா என்று ஏங்கித் துடிதத போது இவர்கள் கூடக் குரல் கொடுக்கவில்லையே எனக் கவலைப்பட்டோர் பலர் இருக்கிறார்கள்.

''இலங்கை கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் நெருக்கடியான இக்கால கட்டத்தில் எமது மக்களின் ஆழமான துயரத்தில் பங்குகொள்கிறோம். வன்முறைகளால் பாதிக்கப்பட்டு தம் உடன் பிறப்புக்களை இழந்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்'' எனக் கோரிக்கைகளில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஏன் இப்போ குரல் கொடுக்கிறார்கள் என்று ஆராய்வதைக் காட்டிலும், இப்போ என்றாலும் குரல் கொடுக்கிறார்களே, அனுதாபங்களைத் தெரிவிக்கிறார்களே என ஆறுதல் அடைவோம்.

நாம் அனுபவித்த துன்பதுயரங்களை சிங்கள மக்களும், அனுபவிக்கும்போதுதான் இவர்கள் உணரத்தொடங்கி உள்ளார்கள் என்று கூறுவது தவறு.

நாம் பட்ட துன்பங்களை சிங்கள மக்களும், அனுபவித்துப் பார்க்கட்டும் என்று கூறுவது கிறிஸ்தவ சிந்தனைகளுக்கு முரணானது.

''தனிநாடு என்ற ரீதியில் நாம் காலத்தின் அறிகுறிகளைக் கணிககத்தவறி உள்ளோம். மேலெழுந்தவாரியாக அமைப்புக்களை மாற்றுவதால் மட்டும் எம்முடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாது... இக்கட்டான சூழ்நிலையில் எமக்குள்ள பாரியபொறுப்புக்களைத் துணிவோடு நிறைவேற்ற எமக்குச் சிறந்த வழியில் இடமளிப்பது செபமாகும்.''

கோரிக்கைகள் வாசிக்கப்பட்டு பல பங்குகளில் சிறப்பாக நடத்தப்படுகிறது. பக்திச்சபைகள் சில பங்குகளில் இக்கோரிக்கைகளை செயற்படுத்துகின்றன.

மனித பலத்தில் அல்ல, இறை பலத்தில் தான் நாம் நம்பிக்கை வைக்கமுடியும் என்பதை கோரிக்கைகள் நமக்குத் தெளிவுபடுத்தி உள்ளன. இக்கோரிக்கைகளை முழுமையாக செயற்படுத்தி வெற்றி காண்போம.

## தேனருவி

### (ஆண்டின் 31-ம் ஞாயிறு 05-11-89)

### வித்தியாசமான சந்திப்பு

இன்று இரண்டு, மூன்று பேர் ஒன்று கூடி ஏதோ கலந்துரையாடுகிறார்கள் என்றால் பெரும்பாலும் தம்மோடு கூடவே இல்லாத ஒரு நபர் தான் அவர்களது உரையாடலின் கருப்பொருளாய் இருக்கும். நான் - நீ என்று தம்மைப் பற்றிய விடயங்களைப் பேசாது 'அவன், 'அவள்' என்ற மூன்றாவது ஆளைப்பற்றிய விமரிசனமாகத்தான் அவர்களது கிசு, கிசு அமையும், நன்றாகவோ, அன்றேல் புகழ்ந்தோ பேசமாட்டார்கள், நாசமாகப் போகட்டும் என்று தான் திட்டுவார்கள் மனிதன் தனக்குத் தானே ஒரு மறை பொருளாய் இருக்கையில் அடுத்தவரைப் பற்றி முற்று முழுதாய் தெரியும் என்ற பாணியில் பேசுவார்கள். இப்படி மனிதனை மனிதன் சந்தேகக்கண் கொண்டு பார்க்கிறான். தீர்ப்பிடுகிறான். மறுதலிக்கின்றான். தவறாக எடை போட்டு, அதற்கு ஒரு விளம்பரமும் செய்து பாலில் நஞ்சைக் கலந்து விடுகிறார்கள். மனிதர்களைச் சந்திக்க முன்னமே அவர்களை எடைபோட்டு விடும் சமூகத்தில் நட்பு, அன்பு, மகிழ்சசி, விடுதலை எல்லாம் அருமையிலும் அருமைதானே.

ஜெரிக்கோ நகரில் நடந்த ஒரு சந்திப்பு உண்மையில் ஒரு வித்தியாசமான சம்பவம். உரோம ஆட்சி பீடத்திற்கு வரி வசூலிக்கும் சக்கேயு ஒரு அநீதன். மக்களை ஏமாற்றிப் பணம் திரட்டியபாவி. அவன் உடலிலும், உள்ளத்திலும் குள்ளன், சாதாரணமாக, வரி வசூலிப்பவர் அநீதர். சக்கேயுவோ அவர்களிலும் போபோன அநீதன் 'பாவி' என்ற லேபிள் குத்தப்பட்ட சக்கேயுவை இயேசு முதன் முதல் பார்க்கிறார். அருகில் இருந்தவர்களும் நிச்சயமாக ''சக்கேயுவா – ஐயோ அதை ஏன் கேட்கிறீர்கள் ..'' என்ற பல்லவி பாடியிருப்பார்கள். ஆனால் இயேசு திறந்த இதயம் கொண்டவர். தீப்பிட விரும்பாதவர் சந்தர்ப்பம் வழங்குபவர் தூயபார்வை கொண்டவர் முதல் அடி தானே எடுத்து வைப்பவர்.

சக்கேயுவைப் பார்த்த இயேசு ''நீ ஒரு பாவி நீ மனம் மாறினால், நான் உன்னோடு சேருவேன்...'' என்ற நிபந்தனையில்லாமல்; இன்று உன்னோடு நான் தங்கவேண்டும் என்றார். பல ஆண்டுகாலமாகப் பட்டுப் போய் இருந்த மரம் ஒரே நாளில் பூத்து, காய்த்துக், கனி கொடுத்ததுபோன்று, பல ஆண்டுகளாக பாவ வாழ்வில் மூழ்கி இருந்த சக்கேயுவின் வாழ்வில் புதிய புதிய தீர்மானங்கள் கனிந்தன. பாவி— குற்றத்தை ஒப்புக்கொண்டவன், பகிரங்கமாகப் பரிகாரம் செய்யவும் தொடங்கினான். அவனுடலில் கருகிக் கிடந்த தெய்வீக பண்புகள் தளிர்விட்டு மலரத் தொடங்கின. காரணம் என்னவென்றால் இயேசு என்ற புதிய இறை-மனிதனை சந்தித்ததுதான்.

இயேசுவின் அன்பு மொழி, அவரது பிரசன்னம் காய்ந்து கிடந்த நதிகளைப் போன்ற பாவிகளை கரை புரண்டு ஓடும் நதிகளாக மாற்றின.

இன்று சமூகத்தில் எத்தனை குற்றவாளிகளை நான் விடுதலை செய்திருக்கின்றேன்! அல்லது எத்தனை அப்பாவிகளை கூண்டில் நிறுத்தியிருக்கிறேன்! பாவிகள் மலிவதற்குப் பரிசேயரும் காரணமாயினர், சமூகத்தில் குற்றவாளிகள் இருந்தால்... தீர்ப்பிட்டுத், தள்ளி வைக்கும் எனக்கும் அந்தப் பாவத்தில் பங்கு உண்டு என உணரமாட்டேனா?

தீர்ப்பிட்டுத் தள்ளி வைக்கும் என் மனதில் மாற்றம் எழுந்தால் பல பாவிகள் மனம் மாற வழியுண்டு திறந்த மனதுடன் புரிந்து கொள்ள நான் முயற்சி செய்தால் பல அப்பாவிகள் குற்றவாளிக் கூண்டிலிருந்து வெளி வர சந்தர்ப்பம் பிறக்கும்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி

ஞான. 11:23–12:2 அனைவருக்கும் நீர் இரக்கம் காட்டுகிறீர்.
தெச. 1:11–2:2 உங்களுக்கும் மகிமை உண்டாகும்.
லூக். 19:1–10 இழந்துபோனதை மீட்கவே மனுமகன் வந்தார்.

### 20ம் வருட நினைவு

வண. சாள்ஸ் சோபறி மத்தியூஸ்

தோற்றம்: 27–5–1879

மறைவு: 1–11–1969



இறைவா! உமது உண்மை ஊழியனும் குருவுமாகிய இவர் இறைவிசுவாசத்துடன் ஆற்றிய சேவைகளைப் பார்த்துஉமது புனிதர்களின் கூட்டத்தில் இவர் மகிழ்ந்திருக்க வரமருள வேண்டுமென்று எமது ஆண்டவராகிய கிறிஸ்து மூலமாக உம்மை மன்றாடுகிறோம். அன்பார்ந்த வாசகர்களுடைய செப வேண்டுதலை நன்றியுடன் வேண்டுகிறோம். A/204


### திருவழிபாட்டு நாட்காட்டி – 1990

1990ஆம் ஆண்டுக்கான திருவழிபாட்டு நாட்காட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

**பிரதி ஒன்றின் விலை ரூபா 15/=**

- கோவில்கள், தாபனங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிட விரும்புவோர் 11-11-89-ற்கு முன் விளம்பரம் ஒன்றுக்கு ரூபா 10/–வீதம் செலுத்தியனுப்புக.
- நாட்காட்டி தேவைப்படுவோர் தொகையைக் குறிப்பிட்டு 18-11-89-ற்கு முன் அறியத்தரவும்.

### மாதா மெழுகுதிரி கைத்தொழில் நிலையம், சாட்டி

எம்மிடம் செபமாலை, செபமாலைத்தியானம், செபப்புத்தகங்கள், பரவணிக்கங்கள், படங்கள், மெழுகுதிரி, குமஞ்சான், தோலகட்டி நெல்லிரசம், இவற்றுடன் பாதுகாவலன் பத்திரிகையும் கிடைக்கும்.

புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்
140, சருவில் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை.


**எப்பொழுதும் மகிழ்ந்திருங்கள், என்ன நேர்ந்தாலும் இறைவனுக்கு நன்றி கூறுங்கள்!**




## 7. திருச்சபையின் முதற் சங்கம்

திராட்சைக் கொடி யூத எல்லைகளைத் தாண்டி
புறவினத்தாரின் தோட்டத்திலே
புதுப்பழங்கள் சொரிந்த காலம்.
சாதி, இன, மொழி வேலிகடந்த அக்கொடிக்கு
சொந்தம் கொண்டாட நினைத்தனர் ஒரு சாரார்,
பாய்ந்து வரும் பேராற்றைக்
கிணற்றினுள் முடக்கப்பார்த்தனர்
சத்தியனின் இறையரசிற்கு
யூத இனச் சாயம் பூச முயன்றனர்,
மனந்திரும்பும் புற இனத்தார்
விருத்த —சேதனம்
யூத மதச் சடங்குகள்
ஆசாரங்கள்
அனைத்தையும் ஏற்க வேண்டுமென்றனர்.
அந்தியோக்கியாவில் மனந்திரும்பிய யூதர் சிலரே
இவ்வர்த்தமற்ற வாதம புரிந்தனர்.
சத்தியத்தின் பெயராலும்
ஆவியின் துணையாலும் அதை எதிர்த்தனர்.
புனித சின்னப்பரும், பர்ணபாவும்.
கிறிஸ்தவம் ஒரு கிளையல்ல,
யூத மரத்தின் கொடியல்ல,
அது ஒரு தனிமரம்.
விழுது விட்டு விசாலிக்கும் புதுமரம்.
வானத்து பறவைகளும்,
நடமாடும் விலங்கினமும்,
அதன் நிழலில் தங்கவரும்.
இதுதான் இவர்கள் வாதம்.
விவாதம் முற்றியது.
முடிவும் நெருங்கியது.
வாதப் பிரதிவாதம் வலுக்க
வாய்த்தர்க்கம் சூடேற
கைகலப்பில் முடிவது உலகியல்,
ஆனால் இப்பிரச்சினையோ ஆன்மீகம்.
நண்பருள் தோன்றிய ரோச முரண்பாடு
அதனால் பேச்சுவார்த்தை நடத்தக் கூடியது சங்கம்.
திருச்சபையின் சங்கம்
ஜெருசலேமில்
கி. பி. 49இல்
இராயப்பர் தலைமையில் கூடியது.
அப்பாஸ்தலர்களும் மூப்பர்களும்
ஒன்றாய்க் கூடினர்.
விவாதம் நீண்டநேரம் நீடித்தது.
முடிவில் தலைவர் இராயப்பர் எழுந்தார்,
‘‘நாமோ நம் முன்னோரோ சுமக்க முடியாத நுகத்தை
இச்சீடர்மேல் ஏன் சுமத்துகிறீர்கள்?
புறவினத்தாரும் சரி, நாமும்சரி
மீட்புப் பெறுவது
ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் அருளால்தான்
இதுவே நம் விசுவாசம்’’ என்றார்.
புனித யாகப்பர் எழுந்து
ஆமோஸ் இறைவாக்கினரை மேற்கோள் காட்டி
பின்வருமாறு கூறினார்.
‘‘கடவுள் பக்கம் திரும்பும் புறஇனத்தவர்க்கு
தொல்லை கொடுத்தலாகாது.
அவர்கள்,
சிலைகளால் தீட்டுப்பட்டதைத் தொடாமல்
கெட்ட நடத்தையை விலக்கி,
மூச்சடைத்துச் செத்ததன் இறைச்சி
மிருக இரத்தம்.
இவற்றை உண்ண வேண்டாம்
என எழுதுங்கள்’’ என்றார்.
அவ்வாறே கடிதம் எழுதப்பட்டு
சின்னப்பர், பர்ணபா ஆகியோருடன்
சீலா, யூதாஸ் என்னுமிருவர் மூலமாக
அந்தியோக்குத் திருச்சபைக்கு அனுப்பப்பட்டது
வாசித்த புறவினத்தார் மகிழ்ந்தனர்.
தேவையற்ற சுமைகள் விலகியதால்
மேலும் பலர் கிறிஸ்தவராயினர்.
கிறிஸ்தவத்தின் வரலாற்றிலோவெனில்
ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது.
கிறிஸ்தவம்
யூத மறையின் ஒரு கிளையல்ல,
ஆனால் உலகளாவிய தனி மறை
என்ற உண்மை உணரப்பட்டது.

— சந்திரன்

# செபமாலையின் வல்லமையும் அதன் அவசியமும்

‘‘வல்லமை மிக்கவர் எனக்கு அருஞ்செயல் பல புரிந்தார்.’’ இது தேவதாயின் புகழ்ச்சிப் பாடலின் ஒரு பகுதி. அவர் செய்த அருஞ் செயலானது, வல்லமை மிக்கவரான தானே தேவதாயின் வல்லமைக்குள் தன்னை அடக்கிக் கொண்டார். வல்லமை மிக்கவரைத் தன்னுள் அடக்கியவளே இச் செபமாலையை எமக்குத் தந்துள்ளாள். எமக்குச் செபமாலையைத்தந்த தேவதாய் எவ்வளவு வல்லமை வாய்ந்தவளோ, அவ்வளவிற்கு வல்லமை வாய்ந்தது அவள் எமக்கு அளித்த செபமாலை.

அவள் பரம தந்தையின் அன்பு மகள்; யேசுவின் நேசத் தாய்; தூய ஆவியின் பாசப் பத்தினி. மூவொரு கடவுளின் உறைவிடம். எமக்காக இறைவனிடத்தில் மனுப்பேசுவதில் அவளுக்கு தனி உரிமை—வல்லமை உண்டு. இதை எந்தக் கத்தோலிக்கனும் இதுவரை சந்தேகித்ததில்லை.

முத்திப் பேறுபெற்ற அலன் டிலாரோச் என்பவர் தேவதாயின் ஓர் அரியதொண்டர். அவருக்குத் தேவ தாயினால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள் என்னவெனில் புனித சாமிநாதர் செபமாலையைப் போதிக்கத் தொடங்கிய உடனே கல்நெஞ்சப் பாவிகளும் மனம் உருகி, தம் கொடிய பாவங்களுக்காக வருந்தியழுதனர். இளம் சிறார்கள் வியக்கத்தக்க தவங்களை மேற்கொண்டனர். அவர் போதித்த இடமெல்லாம் இறைபக்தி மேலோங்கியது. பாவிகள் தம் வாழ்க்கையைச் சீர்ப்படுத்தி தம் மன மாற்றத்தாலும் தவச் செயல்களாலும் எல்லோரையும் மகிழச் செய்தனர். ஒரு நாள் நமதாண்டவர் அலன் ரோச்சிற்குக் கூறியதாவது: ‘‘இந்த ஈனப்பாவிகள் செபமாலையைச் செபிப்பார்களேயானால் எனது பாடுகளின் பெறுபேறுகளில் அவர்கள் பங்குபெறுவார்கள். நான் அவர்களுக்காகப் பரிந்து பேசி எனது பிதாவின் நீதியான கோபத்தைத் தணிப்பேன்’’ அலன் ரோச்சிற்கு தேவதாயின் வேறொரு வெளிப்படுத்துதலின் போது, அவள்; ‘‘எமது ஆண்டவரின் பாடுகளின் உயிருள்ள நினைவுப்பலியாகிய திவ்விய பூசைப்பலிக்கு அடுத்தபடியாக திருச்செபமாலையை விடச் சிறந்த அல்லது அதிக பலனுள்ள பக்தி முயற்சி வேறெதுவும் கிடைக்க முடியாது. ஏனெனில்; அது கிறிஸ்துநாதரின் சீவியத்தினதும் பாடுகளினதும் மற்றொரு ஞாபகார்த்தமாய் இருக்கிறது’’ என்றாள்.

மேலும் செபமாலைக்கு ஏற்கனவே எண்ணற்ற பலன்கள் அளிக்கப்பட்டிருந்த போதிலும், ‘‘ஐம்பத்திமூன்று மணிச் செபத்தைப் பக்தியுடன் முழந்தாளிலிருந்து செபிப்பவர்களுக்கு அவர்கள் சாவான பாவமின்றியிருந்தால் நான் இன்னும் பல பலன்களை அளிப்பேன் என்றும் செபமாலைப் பக்தியை விடாது அனுசரித்து, இச் செபங்களையும், தியானங்களையும் செய்து வருபவர்களுக்குத் தகுந்த சம்பாவனை கிடைக்கும், வாழ்வின் இறுதி நாளில் அவர்களது பாவங்களின் தோஷங்களிலிருந்தும், அவற்றிற்குரிய தண்டனைகளிலிருந்தும் பூரண மன்னிப்பை நான் பெற்றுத் தருவேன். இது நடக்க முடியாது என்று நினைத்து அவ நம்பிக்கை கொள்ள வேண்டாம். இது எனக்கு அரிதான செயலல்ல. ஏனெனில் நான் வானுலக அரசனின் தாய். அவர் என்னை ‘‘அருள் நிறைந்தவளே’’ என அழைக்கிறார். நான் அருள் நிறைந்தவளாய் இருப்பதால் அத்திருவருளை எனது பிள்ளைகளுக்கு வாரி வழங்கக் கூடியவளாயிருக்கிறேன்’’ என்றும் தேவதாய் கூறியுள்ளாள்.

துறவியான டோமினிக் என்பவருக்கு தேவதாய் காட்சி கொடுத்து, ‘‘அருள் நிலையிலுள்ள ஒரு விசுவாசி கிறிஸ்துநாதரின் வாழ்க்கையையும், பாடுகளையும் தியானித்து செபமாலையைச் செபிப்பானாகில் அவன் தன் பாவங்களனைத்தினின்றும் பூரண மன்னிப்படைகிறான்’’ என்று அறிவித்தாள்.

இவ் வல்லமையுள்ள செபமாலை எம் வாழ்வில் மிக மிக அவசியம். அது தேவதாய் வழியாய் எம்மை யேசுவில் இணையச் செய்கிறது. அன்று கானாவூரில் எவ்வாறு அக் குடும்பத்தில் ஏற்பட்ட இன்னல் வேளையில் அக்குடும்பத்தின் நிலை அறிந்து அவர்களை யேசுவுடன் தொடர்புபடுத்தி உதவி புரிந்தாளோ அவ்வாறே இன்றும் தேவதாய் எம்குறை தீர்க்கும் குணக்குன்றாய் விளங்குகிறாள். எமக்குத் தேவைப்படும் இன்னோரன்ன அவசரங்களில் உதவி புரிய ஆயத்தமாய் இருக்கிறாள்.

1917-ம் ஆண்டு தேவதாய் பாத்திமாவில் காட்சி தந்த போது ‘‘நீங்கள் கட்டாயம் செபமாலை செபிக்க வேண்டும்.’ என்று கூறினாள். ருஷியா மனம் திரும்பும், உலகம் சமாதானத்தைக் கண்டடையும் என்னும் அவளின் இரு வாக்குறுதிகள் இல்லாவிட்டாலும் கூட அவளின் அன்பு நிறை நேரடியான இக்கட்டளை நம்மைச் செபமாலையைக் கரத்தேந்தி பக்தியோடு செபிக்கச் செய்ய வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு அன்புத் தாயும் அவசியமில்லாதவொன்றைத் தம் பிள்ளைகளிடம் வலியுறுத்த மாட்டாள்.

உண்மையில் தேவதாய் பாத்திமாவில் கூறிய மொழிகள் செபமாலை மூலம் அவளது விசேட உதவியை நமக்கு அளிக்க அவளுக்குள்ள ஆசையைத் தெரிவிக்கிறது.

புனித சாமிநாதருக்கு அவள் ‘‘செபமாலைப் பக்தியை எங்கும் பரப்பு, அதை மக்களுக்குக் கற்பித்துக் கொடு. இந்தச் செபமாலைப் பக்திவழியாகப் புண்ணியம் தழைத்தோங்கும், பாவப் பழக்கம் வேரறுக்கப்படும் தப்பறைகள் நிர்மூலமாக்கப்படும்’’ என்று கூறினாள்.

15-ம் நூற்றாண்டில் முத்திப் பேறுபெற்ற அலன் ரோச் என்பவருக்கு தேவதாய் அளித்த வாக்குறுதிகள் நம் வாழ் நாள் முழுமையும் மனத்திலிருக்க வேண்டியவை. அவை ‘‘செபமாலை வழியாய் என்னைக் கூவியழைப்பவர்கள் அழிவையடையமாட்டார்கள். செபமாலை வழியாய் நீங்கள் கேட்பதெல்லாம் உங்களுக்கு அளிக்கப்படும். இந்தச் செபமாலைப் பக்தியைப்பரப்புகிறவர்களுக்கு அவர்களது அவசரங்களிலெல்லாம் என் உதவியை அளிப்பேன்’’ என்பன.

லூர்து கெபியில் புனித பெர்ணதேத்தம்மாளுக்கு தேவதாய் காட்சி தருகையில் பேர்ணதேத்தும் செபமாலையைக் கையில் ஏந்தியபடி செபமாலை சொல்லவேண்டுமென்று வற்புறுத்தியது மாத்திரமல்ல, தேவதாயும் செபமாலையுடன் காட்சியளித்தாள்.

பாத்திமா பதியில் தேவதாய் தன்னை ‘‘செபமாலை மாதா’’ என அழைக்கிறாள். மக்கள் எல்லோரும் செபமாலை சொல்ல வேண்டும் என்ற தன் விருப்பத்தையும் இவ்வாறு காண்பிக்கிறாள்.

செபமாலை வழியாய் பல உண்மைகள் வெளிப்பட்டன. தப்பறைகள் அழிந்தன. யுத்தங்கள் பல நிறுத்தப்பட்டன. இதனால் சமாதானம் தழைத்தது. பல ஆபத்துக்கள் மேற்கொள்ளப்பட்டன. இன்று நாம் நம் நாட்டை உலகைப் பார்க்கும் போது செபமாலையின் இன்றைய அவசியத்தை உணர்கின்றோம். இந்த வல்லமையுள்ள ஆயுதம் பல இடங்களில் மறக்கப்பட்டு, மறுக்கப்படடு ஏன மறைக்கப்பட்டும் வருகின்றது இன்றைய இந்நிலைக்கு இதுவே முக்கியகாரணம்.

தேவதாயே, சமாதானத்தின அரசி-போர்களில் வெற்றி கொள்ளும வீரத்தாய். இறைவனிடம் எமக்காகப் பரிந்து பேச வல்லமையுள்ளவள். தாயின் மடியில் தலைவைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை. எனவே செபமாலை மூலம் அத்தாயை நாடுவோம்—அவளைத் தேடுவோம். அவளிடம் ஓடுவோம்
வாழ்க! அன்னை நாமம். வளர்க! அவள் புகழ்.

அருள்திரு. லூயிஸ்
மொன்போட்

# பங்குத்தளங்களில்....

## அனலைதீவில்...

ஐப்பசி மாதம் 7-ம் திகதி சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு அலைலதீவில் அன்னை செபமாலைமாதா திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டு முதன் முறையாக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கரம்பன் பங்குத் தந்தை அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும், நாரந்தனை உதவி பங்குத் தந்தை அருள்திரு. யூஜின் பிரான்சிஸ் அடிகளாரும், யாழ்ப்பாணம் அருள்திரு. ஜெயசீலன் அடிகளாரும், கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். இன்னும் இவ்விழாவை சிறப்பிப்பதற்கு கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இருந்து கலாநிதி அருள்திரு. டோமினிக் அடிகளாரும், அருள் சகோதரர் சிலரும் கலந்து கொண்டனர். அனலைதீவு, ஊர்காவற்றுறை பங்கையே சாரும். அனலைதீவு பங்குத் தந்தை அருட்திரு கிருபானந்தன் அடிகள் தமது உரையில் இங்கு மாதா சுரூபம் ஸ்தாபிப்பதற்கு பல எதிர்ப்புகள் தோன்றிய போதும் விடா முயற்சியின் காரணமாக இவ்விழாவை அனலைதீவு மக்களே முன்னின்று நடத்துமளவிற்கு மாதா அவர்கள் மனதை மாற்றியது. நமக்கெல்லாம் பெருமையே என்றார். திருப்பலி முடிவடைந்ததும் திருச்சுருப பவனி கோவிலைச்சுற்றி இடம் பெற்று திருச்சுருப ஆசீர்வாதத்துடன் திருவிழா நிறைவு பெற்றது. இவ்விழாவிற்கு ஊர்காவற்றுறை, கரம்பன், நாரநதனை ஆகிய இடங்களில் இருந்து யாத்திரிகர்கள் கூட்டம் அனலைதீவுக்குச் சென்றனர். இவர்களுக்கான படகு சேவையை அருள்திரு கிருபானந்தன் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார். 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரம்பன் பங்குத்தந்தை அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் தலைமையில் கரம்பன் மெலி சிமுனே கலைக்குரிசில் நாடக மன்றத்தினர் மாதாவின் புதுமையை எடுத்துக் கூறும் வகையில் அனலைதீவில "கண் திறந்து காணி கொடுத்த காரிகை' என்ற நாட்டுக் கூத்தை அரங்கேற்றினர்.

அவ்வேளையில் அருட் திரு. கிருபாலந்தன நாட்டுக கூத்து வளர்ச்சியடைவதற்கு கத்தோலிக்க மதமே காரணமாய் இருந்தது என்றும், தீவுப்பகுதியில நாட்டுக் கூத்து வகைகள அழிந்து போகாமல் அதனைக் கட்டிக்காக்கும் பெருமை மெலிஞ்சி முனை மக்களையே சாரும என்றும் தமதுரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அருட் திரு. ஜெயசீலன் அடிகள் அன்று லெபாந்தோ நகரில் திருத் தந்தை யுத்தம் நீங்கி சமாதானம் உண்டாக செபித்தது போல், இன்றும் பிரச்சனைகள் நீங்கி சமாதானம் நம் மத்தியில் நிலவ வேண்டுமென்று, அன்னையை வேண்டும்படி அனலைதீவு மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

தகவல்: நீற்று சிவந்தி
கொலின்ஸ்
ஊர்காவற்றுறை.

* * *

## புதுக்குடியிருப்பில்...

புதுக்குடியிருப்பு மறையாசிரியர் சங்கத்தினரால் மறைக் கல்வி பயிலும் மாணவர்களுக்காக 19-08-89 சனிக்கிழமை இரணைப்பாலை றே.க. வித்தியாலய மண்டபத்தில் மாபெரும மறைக்கல்வி விழா கொண்டாடப்பட்டது. விழாவில் பங்குத்தந்தை ஜெபரட்ணம் அவர்களோடு. முல்லைத்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு ஸ்ரான் அவர்களும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். கற்பித்தலால் மட்டுமன்றி, கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவரையும் நிறைவுள்ளவராக்கும் வகையில் நடனம், தாளலயம், இசை, சித்திரம் என பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இதில் இடம்பெற்றன. ஆண்டு 1 - ஆண்டு 12 வரையுள்ள மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தனர். தமது அழைப்பின் நோக்கத்தையும், கற்பித்தல் திறனையும் நிகழ்ச்சிகள் மூலம் திறமையாக மறையாசிரியர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். விழாவின் போது மறைக்கல்விப் பொதுப்பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றமாணவருக்கும், மறையாசிரியர்களுக்கும் பங்குத்தந்தையால் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்தோடு இவ்விழாவில் அருட் சகோதரர்கள் அன்ரனிப்பிள்ளை, அகஸ்ரீன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். அன்புத்தந்தை அருட்திரு. ஜெபரட்ணம்அவர்களின் வழிநடத்தலில் முதல் தடவையாக இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

மறையாசிரியர்:
J. மரியரட்ணம்

* * *

## ஆனைக்கோட்டையில்

ஆனையூர் புனித அடைக்கல நாயகி ஆலய வருடாந்த பெருவிழா ஆவணித் திங்கள் 30 ஆம் நாள் கொடியேற்ற வைபவத்துடன் ஆரபமாகி அன்னையின் பிறந்ததினமாகிய புரட்டாதித திங்கள் 8 ஆம் நாள் மூன்று குருக்களின் கூட்டுத்திருப்பலியுடனும், அன்னையின் திருச்சுரூபப்பவனியுடனும் இனிதே நிறைவுபெற்றது.

இவ்விழாவிற்கு ஆயத்தமாக நவதின வழிபாடுகள் தினமும் மாலையில் இடம்பெற்றது. இவ்வழிபாடுகளை அருள்திரு. ஜீவாபோல் (அ. ம. தி.) அடிகளார் மிகவும் சிறப்பாக நிகழ்த்தினர். "நம் வாழ்வில் ஆன்மீக தாகம்" "விசுவாசம் நமது செயலில் காட்டப்பட வேண்டும்" "துன்பவேளையில் நம்பிக்கையோடு இருத்தல் வேண்டும்" "ஒருவரை ஒருவர் மதித்து வாழவேண்டும்", "இலட்சியத்தை விற்றுவிடாதீர்கள்"!, "நடந்ததை மறந்து எதிர்காலத்தை மாற்று", "ஒரு நற்கருணை சமுதாயம் உருவாகுமா?", "மரியாளின் அன்பு இறக்கைக்குள்". என்னும் தலைப்புக்களின் கீழ் வாழ்வோடு கூடிய அருளுரைகள் ஆற்றப்பட்டது.

இவ்வழிபாடுகளில் விசேட விதமாகத் தற்போது நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இவ்வாலயப் பங்குத்தந்தை K. B சந்தியாப்பிள்ளை அடிகளார் குணமெய்தி அவர் தம் இறை பணியை மேலும் தொடர அவருக்கு இறைவன் அருள் பாலிக்க வேண்டுமென மன்றாடப்பட்டது. ஆராதனை ஒழுங்குகள் அருட்கன்னியரின் வழிகாட்டலில் நடைபெற்றது

தகவல்:- செ. எ. றெஜான்.

* * *

## நானாட்டானில்...

மேற்படி ஆலயத்தில் மரியாளின் விழா ஆயதத வழிபாடுகளுடன் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மறையுரை வழங்குவதற்காக அருட்தந்தை ஜெரோம் லெம்பேட் அடிகளார் அவர்கள் வருகை தந்து, எமது பங்குத் தந்தை அருட்திரு. போல் நட்சத்திரம் அ. ம. தி. அடிகளாருடன் இணைந்து திருவிழாவை நெறிப்படுத்தியது, குறிப்பிடத் தக்கது.

நடப்பாண்டிற்கான புதிய
உறுப்பினர் விபரம்

போஷகர்:- திரு. நீ. ம. நீக்கிலாப்பிள்ளை, தலைவர்: திரு. பெ. பாலானந்தம், செயலர்:- திரு. இ. மரியாம்பிள்ளை, பொருளர்:- திரு அ ஆரோக்கியம், சங்கிஸ்தம்:- திரு. செ. அந்தோனிப்பிள்ளை.

நிர்வாக சபை உறுப்பினர்கள்

திருவாளர்கள்:- அ. மரியதாஸ், இ ம யோகராஜா, பெ பாலசேகரம், தெ இருதயநாதன், ம. யேசுராஜா, இ. எமிலியானுஸ்பிள்ளை.

* * *

## தருமபுரம்....

பரந்தன் பங்கைச் சேர்ந்த தர்மபுரத்தில் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருவிழாவை ஆகஸ்ட் 24ந் திகதி வியாழக்கிழமை பங்குத் தந்தை அருட்திரு ஓம்லோ (அ.ம.தி.) அடிகளார் கொடியேற்றி ஆரம்பித்துவைத்தார்.

ஞாயிற்றுக்கிழமை பங்குத் தந்தை ஒம்லோ அடிகளாரும் அருட்திரு இருதயதாஸ் அடிகளாரும் திருநாட் திருப்பலியைக் கூட்டாக நிறைவேற்றினார்கள். அன்று மறையுரை வழங்கிய அருட்திரு இருதயதாஸ் அடிகள் தற்போதைய துன்பநிலை. இறைவன் தனது திட்டத்தின் ஊன்றுகோலாகத் தந்துள்ளார் என்றும் இச்சூழ் நிலையில் இறைவன் எங்களுடன் இருக்கின்றார் என்ற விசுவாசம் இருப்பின் இவற்றிலிருந்து விடுபடலாம் என்றும் கூறினார். புனிதரின் திருச்சுரூபபவனியின்பின் அருட்திரு ஓம்லோ அடிகள் திருச்சுரூப ஆசீர்வழங்கியதுடன் திருவிழா இனிதே நிறைவேறியது.

தகவல்:- T.S.மொன்ஸினி

## புனிதர் வழியில்

புனிதர்களான சிமோன்,
யூதாததேயுஸ் அக்டோபர் -28

புனிதசிமோன்:

கனனேயராகிய இவரை "தீவிரவாதி"என்று அழைப்பதற்கு காரணம் யாதெனில் மெசியாவின் யுகத்தை வன்முறையால் கொண்டுவரத் திட்டமிட்டவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதனாலாகும்.

புனித யூதாததேயுஸ்:

இவரை நற்செய்தியாளர் லூக்காஸ் "யூதா" என்றும் மத்தேயுவும், மார்க்கும் "ததேயுஸ்" என்றும் அழைக்கின்றனர். இவர் சின்னப்பரின் சகோதரன், ஆண்டவரின் உறவினர். இவருடைய தாய் மரியாள், நமது தாய் மாமரியின் உறவினர். இவரது தந்தை அல்மேயு,புனித சூசையப்பரின் உறவினர். இன்று இவர் "கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்" என அழைக்கப்படுகின்றார். இவரும், புனித சிமோனும், நற்செய்தியைப் போதிக்க வெவ்வேறு திசைகளில் சென்றனர். எகிப்து, மெசப்பத்தேமியா ஆகியநாடுகளில் திருப்பணிபுரிந்தாலும், இறுதியில் இருவரும் பெர்சியாவில் சந்தித்து ஒன்று நற்செய்தி போதித்ததாகக் கருதப்படுகிறது. பின்னர் இருவரும் மறைசாட்சியாக மரித்தனர். (இன்றைய ஆராய்ச்சியின்படி இவரது பெயரால் வழங்கப்படும் நிருபம் இவரால் எழுதப்பட்டதன்று எனக் கருதப்படுகிறது.)

புனிதர் அனைவரின் பெருவிழா
நவம்பர் -1

இறந்த விசுவாசிகள் அனைவரின்
நினைவு நவம்பர் -2

3-வது நூற்றூண்டின் தொடக்கத்திலேயே, தெர்தெல்லியன் கூறியுள்ளது போல், ஒருவன் இறந்த நாளன்றும், அதன் பிறகு ஆண்டு நிறைவு நாளன்றும் அவருக்காகப் பலி நிறைவேற்றப்பட்டது. 7-வது நூற்றூண்டில் ஸ்பெயின் நாட்டில், இறந்த விசுவாசிகளின் நினைவு தூய ஆவியானவரின் திருநாளுக்கு மறுநாள் கொண்டாடப்பட்டது அது 11-வது நூற்றூண்டில் நவமபர் மாதம் 2 ஆம் தேதியாக மாறியது. குளுனியைச் சேர்ந்த மடாதிபர் புனித ஒடில்லோவின் தீர்மானப்படி, குளுன் துறவற சபையின் எல்லா மடங்களிலும் சகல புனிதர்களின் விழாவுக்கு அடுத்த நாள் இறந்த விசுவாசிகள் நினைவு கூரப்பட்டனர்.

S. S. கருணைதாஸ்
அ ம. தி. குருமடம்
கொழும்புத்துறை

## நல்லதோர் கோயிலாய் உதித்தவர் நீர்

ஊருக்கு நான்கு கோயில்கள் கட்டி
உதவி விட்டாலே எந்தனது
பேருக்கு எந்த இழிவுமில்லை என
பேதலிப் போக்கு சாட்டையாய் நீ
வீட்டுக்கு வீடு கோயிலாய் மாறி
விரும்பியோர்க் கெல்லாம் செய்தியாய் ஆகி
நாட்டுக்கு நல்ல செய்திகள் சொல்ல
நல்லதோர் கோயிலாய் உதித்தவள் நீ
கல்லினுல் கோயில்கள் கட்டிவிட்டால் அது
கள்வர்கள் குகைபோல் மாறிவிடு மென
நல்ல பரன் முன்னே உணர்ந்த தாலோ உன்னை
வல்லதோர் கோயிலாய் தேர்ந்தெடுத்தார்.
"ஊரிலே வாழும் பெண்களெல்லாம் இன்று
உலகினில் மீட்பரைத் தந்திடலாம்" என
பேரவா கொண்டு நீர் பிறந்து காட்டி — எம்மில்
பெரும் புரட்சித் தீ வளர்த்து நின்றீர்.
அரசியல் மாற்றம் செய்வதற்கு இன்று
அறிஞர்கள் மட்டும் தேவையில்லை.
பொருது வருகின்ற போரிலே யே நீர்
பொடிப் பொடியாகத் தகர்த்தெறிய
வீரிய முற்ற மெய்சுவைப் பெற்று
வீரகல் காவியம் படைத்து நின்றீர்.
நேரிய வாழ்வில் என்றும் நாம் வாழ்
சீரிய காவியம் படைத்து நின்றீர்
தேவை என உனைத்தேடி வரும் மாந்தர்.
தேவைகள் ஆற்றிடும் தேவதை நீர்
தாவிடும் மாந்தர்க்கு தப்பாமல் பேசிடும்
தாகம் தணித்திட வேண்டுமம்மா.
கானு ஊர் சம்பவம் கண்ணின் முன்னல் நின்று
கண் கட்டு வித்தைகள் செய்யுதம்மா.
ஏனோ தானோ என்ற எங்களின் வாழ்வினில்
ஏமாற்ற மாட்டீர் நீர் உண்மையம்மா.
வார்த்தையாய் அன்று விளங்கியவர் — இன்று
வாழ்விலே என்றும துலங்கியவர் — புது
ஏற்பாடாய் எம்மிடம் கொண்டு வந்தாய் — உன்
பொற்பதம் வீழ்ந்து வணங்குகின்றோம்.

வனஜா அந்தோனிப்பிள்ளை, சில்லாலை

# ஒளிமயமான எதிர்காலம் உங்கள் உள்ளத்தில் தெரிகின்றதா?

மனிதன் தோன்றுகின்றுன், பருவகாலங்களில் உரியதை உரிய நேரத்தில் செய்து விடுகின்றுன். அதிலும் சுயநலம் கொண்டவர்கள் தான் எத்தனை? எத்தனை? நான், எனது, என்ற பதங்களே அவர்களின் வாய்நின்று எழுகின்ற வார்த்தைகள். இவை மாற வேண்டும். எம், எங்கள், என்பவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் உள்ளத்தில் உன்மையான அமைதி தங்கும்

நாம் உலகில் வரும் போது என்ன கொண்டு வந்தோம்? நாம் இறந்து போகும் போது எதைக் கொண்டு போகின்ருேம்? உரோமைச் சாம்ராஜ்யததை ஆண்ட மன்னன் மகா அலெக்ஸசாந்தரின் கதையை சற்று பாருங்களேன். உரோமைப் பேரரசிற்கு வித்திட்ட மாமன்னன் மகா அலெக்ஸ்சாந்தர், தன்னுடைய மரணததறுவாயில், அமைச்சர்களை அழைக்கின்ருர். அவர் வாயின் நின்றும வார்த்தைகள் எழுகின்றன. ''அமைச்சர்களே! நான் இறந்ததும் என்னுடலை பெட்டியினுள் வைத்துக் கைகளை வெளியே தொங்க விடுங்கள்'' என்ருர். அது கேட்ட அமைச்சர்கள் திகைப்புற்று ''ஏன் மன்ன அப்படிச் செய்ய வேண்டும்?'' எனறு கேட்க அவரோ ''நான் பூமியில் பிறக்கும் போது ஒன்றையும் கொண்டுவர வில்லை. அதுபோல் நான் போகும் போது ஒன்றையும் கொண்டு போகவில்லை என்பதை மக்களுக்கு உணர்த்தவே அப்படிச் செய்யுங்கள்'' என்ருன்.

அந்த மாமன்னன் அப்படிச் செய்யும் போது எத்தனையோ படிகள் குறைவான சாதாரண மக்கள் நாம் ஏன் வாஞ்சைப் படவேண்டும்? உன்போல அயலானை அன்புக்கண்களால் ஒரு கணம் நோக்கி நண்ப, உண், குடி, உடு, என்ருல் ஓராயிரம் வழிபாடுகளை நிகழ்த்தி விடுவாய் உன் உள்ளத்தில் இது உண்மையிலும் உண்மை, வீணன மண், பொன், பெண், ஆசைகளை விடுத்து உண்மைச் சகோதர அன்பின் ஊற்றுக்களாக வாழ எண்ணுவோம். எம்மீது பொங்கும் அன்பென்னும் நீர் ஆருகப் பெருக்கெடுத்து அண்டத்தை அடையட்டும். ஒளிமயமான எதிர்காலப் பயிர்கள் ஒவ்வொரு உள்ளத்திலும் துளிர் விடட்டும்.

அமைப்பு:
மரியாம்பிள்ளை - ருேமியல்
ஆரோபணம்
D–8 கிளிநொச்சி

---

கொழும்புத்துறை
27-10-1989

அன்பு இளம் உள்ளங்களுக்கு




''எள்ளா திருப்ப இழிஞர்
போற் றற்குரியர்
வள்ளா வறிஞரது
வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புள துநர்
கட்டுகுள மன்றிக்
கரைகாப் புள தா கடல்''
—நன்னெறி துறைமங்கலம்
சிவப்பிரகாச சுவாமிகள்

அதாவது, தண்ணீரைகட்டி வைக்கும் குளம், நீக்கப்படாத கரையாகிய காவலை உடைய தாயிருக்கிறது. அதே வேளை சமுத்திரமானது கரையாகிய காவலை உடைத்தாயில்லை. அதேபோல, கீழோர் தமைப் பிறர் இகழாமல் இருக்குமாறு காக்கப்படுதற்குரியவராவர்; நீங்காத அறிவுடைய பெரியோர் அங்ஙனம் காக்கப்படுதலை விரும்பார். சுருங்கச் சொல்லின்,

அறிவற்றவர்கள் தம்மை மற்றவர்கள் இகழாதிருக்கும்படி பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும்; அறிவுடையோர்க்கு அது வேண்டுவதில்லை.

ஆனல் நாமோ பிறர் எம்மை பிழையாக விளங்கிக்கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தோடு தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் அடிக்கடி ஈடுபட்டு வருகின்ருேம. எமது இயல்பான தன்மையை வெளிக்காட்ட மறுத்து வருகின்ருேம். மற்றவர்கள் 'என்னை ஒரு அப்பாவி' எனக் கருதுகின்ருர்கள். எனவே, அதனைக் கூடிக்காக்க வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு வாழ்கின்ருேம். பிறரது புகழ்பாக்களாலே. போற்றுதல்களாலே மயக்கமுற்றுக் காணப்படுகின்ருேம். எனவே,

வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் நிலை ஒன்றுதான் என்ற ஒருமித்த நல்ல மனநிலையில் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம்.

அன்பு நெஞ்சன் வி. பி

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻ ✻✻✻✻✻✻✻✻✻✻

உங்கள் உள்ளத்தில் ஊன்றப் பெற்ற வார்த்தையை அமைந்த மனத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். இவ்வார்த்தையே உங்கள் ஆன்மாவை மீட்க வல்லது.

(யாகப்பர் 1:22)

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

## வெட்டி வீழ்த்தடா தீமை அழியட்டும்

கேளடா மனிதா கேளொரு வார்த்தை
எம்மில் தீமைகள் எத்தனை! எத்தனை!
இத் தீமையை விலக்கி விடு! உனக்கு
ஈசன் மேல் நம்பிக்கை வரட்டும்
பின்பு தீமைக்கு குறிவைத்து விடு! பின்
அத் தீமையை வெற்றி கொள்ள!
தியானத்தில் திரண்டு விடு! பின்
தீங்கை வென்று விடு! மனிதா!
ஐந்தறிவான ஜந்துக்களின் வாழ்வைப்பார்!
ஆறறிவான உன் வாழ்வைப்பார்!
ஜந்துக்களின் வாழ்வில் தீமையுண்டோ!
மானிடர் வாழ்வில் நன்மையுண்டோ!
ஏனிந்த கொடுமை என்று கேள் மனிதா!
பூமிமேல் தீமையை ஒழித்து விடு!
பிறப்பில் உண்டோ தீமை!
இறப்பில் உண்டோ தீமை!
ஏனிந்த கொடுமை! நாம்
ஈசன் பெற்ற பிள்ளைகள் மனிதா
நீ ஈசன் வழியில் வாழ்ந்து விடு
உனக்கு அழிவு வராதபடி காத்துவிடு! மனிதா.

புதுக்குடியிருப்பு T. குயின்ரன்

## வறுமைதான் காரணம்

மனிதன் வறுமையால் வெட்கம் அடைகின்ருன், வெட்கத்தால் மகிமை குன்றுகிருன், மகிமை குன்றுவதா அவமதிக்கப்படுகிருன், அவமதிக்கப் படுவதால் உற்சாகம் இழக்கின்ருன், உற்சாகம் இழப்பதால் துக்கம் அடைகின்ருன், துக்கத்தால் புத்தியை இழக்கின்ருன், புத்தி இழப்பதால் நாசமடைகின்ருன். வறுமைதான் ஆபத்துக்கெல்லாம் மூல காரணம்,

S. செல்வக்குரு.
தாழையடி

---




உளவியல் என்ருல் என்ன என்று தெரியாத காலத்தில் உறவுகள் உறுதியாக இருந்தன. ஆனல் இன்று சாதகம் பார்த்து, இலக்கம் தெரிந்து, சகுனங்கள் பார்த்து திருமணங்கள் செய்யப்படுகின்றன.

திருமணம் என்பது திருமணத்தில் இணையும் இருவரும் நிர்ணயிப்பதே தவிர நாளும், கோளும், சாதகங்களும், கைரேகைகளும் அல்ல.

பொருத்தம் எனபது என்ன குறை உண்டு என்று பார்ப்பதல்ல, மாருக திருமணத்தில் இணையும இருவரும புரிந்துணர்வினுல் ஏற்படுத்துவதாகும். பொருத்தம் பார்க்கும் போது ஏற்கனவே என்ன குறை என்று பார்க்காமல் குறைகளோடும், நிறைகளோடும் பொருந்துமா என்று பார்ப்பதாகும்.

தொடர்ந்து படியுங்கள், விளங்கும்.
அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

### 1 ஒப்பற்ற உறவு

நாம் காற்றின்றி உயிர்வாழ முடியாது. ஆயினும் அதன் இன்றியமையாமையும், அதன் வியாபகத்தையும் நாம் அறிவோம். அதுபோலவே எமது வாழ்க்கைக்கு மனித உறவுகள் அவசியமானதென்பதை நாம் உணர்கின்ருேம். மனிதன் உறவுகளிலும், உறவாலும் வாழ்கிருன், என்று கூறினல் அது மிகையாகாது. பிள்ளை பிறந்ததிலிருந்து முதிர்ச்சியடையும்வரை தாய், தந்தை, குடும்ப உறுப்பினருடைய உணர்ச்சிமிக்க உறவுகளினல் உருவாக்கப்படுகிருன். மற்றவர்களோடு நட்புறவினுல் பிணைக்கப்பட்டு அதனல் ஏற்படும் உறவுகளினுல் ஒரு வயது வந்த மனிதன் வாழ்கின்ருன். இவ்விதமான உறவுகள் அவனது வாழ்க்கையைப் பயனுள்ளதும், அர்த்தமுள்ளதும் ஆக்குகிறது. உறவுகளில் பல தரங்கள் இருப்பது கண்கூடு, உறவுகள் எவ்வளவு நெருக்கமானதாக இருக்கின்றனவோ அவ்வளவிற்கு அவை உடல் நலத்திற்கும் வலுவூட்டுகின்றன. மற்றவர்களோடு எதுவித உறவும் இல்லாத மனிதன், ''மனிதன் அல்லன்.'' இவன் மனிதத்தன்மையில் முரண்பட்டவன். மற்றவர்களிடமிருந்து விலகியிருப்பது, மற்றவர்களால் தள்ளி வைக்கப்பட்டிருப்பது, துணையின்றித் தனித்திருப்பது, உளநூல் தத்துவப்படி சகிக்கமுடியாத தொன்ருகும். உறவுகள் எவ்வளவு நெருக்கமானதாக இருக்கின்றனவோ அவை முறிவடைகின்ற போது ஏற்படுகின்ற தாக்கமும பெரிதாக இருக்கும். முறிந்த உறவுகளினல் ஏற்படும் மனத்தாக்கங்கள் சகிக்க முடியாத புறக்கணிப்புகள், அல்லது தனிமைகள் தான் தற்கொலைகளுக்குக் காரணமாகின்றன.

எனவே அன்னியோன்னியமான, ஆழமான, நெருக்கமான உறவுகள் எமது வாழ்க்கையை ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும். இரண்டு தனி மனிதர்களுக்கிடையில் ஏற்படும் மிக ஆழமான, உண்மையான உறவு திருமணத்தினுலேயே ஏற்படுகிறது அது ஒரு பூரணமான உறவாகும். ஏனெனில் அவ்வுறவில இருவரும் முழுமையாக பங்கு கொள்கின்றனர். இதனை இருமையங்களினதும் இணைப்பு எனலாம். அவர்கள் ஒவ்வொருவரதும் நடுமையம் வரை இவ்விணைப்பு ஆழமாக வேருன்றி நிற்கின்றது. இதை இருமையங்களினதும் பரிமாற்றம் என்றும் கூறலாம் இதுதானே காதலின் வரைவிலக்கணம். எல்லாமே இந்த ஐக்கியத்தில் ஒன்று சேருகின்றன. உள்ளமும், இதயமும், ஆவியும், உடலும் சங்கமமாகின்றன. இதுவே திருமண உறவின் ஒப்பற்ற தன்மையாகும். சித்திகரமான திருமணத்தால் மகிழ்ச்சியும், மனநிறைவும் ஏற்படுவது போல, மணமுறிவுகளினுல் துன்பமான விளைவுகளும், கவலைகளும் ஏற்படுகின்றன. திருமணத்தில் இணையும் இருவருமே தம் திருமண வாழ்வை நிச்சயிக்கின்றனரே தவிர வேறுயாரும் அல்ல. திருமணமென்பது நீங்களே ஆக்கிக் கொள்ளும் உறவே தவிர நாளும, கோளும், சாதகங்களும், கைரேகைகளும் அல்ல திருமண முறிவு ஏற்படும் பொழுது பொருத்தமின்மை என்ற போர்வையின் கீழ் நாளையும், கோளையும், சாதகத்தையும் குறைகூறுகின்றனர். பொருத்தம் என்பது திருமணத் தம்பதிகளில் ஒருவரிலே இருக்கும் குறை என்று இளம் உளளங்கள் கருதுவதை விடுத்து தங்களது சாதுரியத்தாலும், விடாமுயற்சியினுலும், புரிந்துணர்வினுலும் ஆக்கிக்கொள்ளும் வாழ்க்கை என்று கருதுவதே மேல்.

# அருள்வாக்கு அறிவோம்

## சிறிய இறைவாக்கினர்-38.

**மலக்கியாஸ்-2.**

பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த இஸ்ராயேல் மக்களில் சிலரே தாயகம் திரும்பினர். அவ்வாறு திரும்பியவர்கள் யெருசலேமைச் சுற்றிக் குடியேறினர். கமத்தொழிலில் ஈடுபட்டனர். நிலம் நல்ல பலனை அளிக்கவில்லை. வரட்சியும், பஞ்சமும் நிலவியது. அத்துடன் அண்டை நாட்டாரின் எதிர்ப்பும் இருந்தது.

இதனால் மக்கள் மத்தியில் நாடு திரும்பி வந்தபோது இருந்த உற்சாகம் பின்னர் குறைந்து விட்டது. பலர் சமயப் பற்று அற்றவர்களாக இருந்தார்கள். பக்தியுள்ளவர்கள் கூட இறைவனில் ஐயுறத் தொடங்கினர். பகுத்தறிவு வாதம் வளர்ந்தது. விசுவாசம் குறைந்தது. பரம்பரையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகளைப்பற்றி மக்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் இறைவனின் அன்பில் சந்தேகம் கொண்டபோது மலக்கியாஸ் இறைவாக்கினர் பதில் அளிக்கிறார். ஏசாயு வழி வந்த ஏதோமித்தரைவிட யாக்கோபு வழி வந்த இஸ்ராயேலர் மேல் இறைவன் அதிக அன்பு கொண்டுள்ளதை எடுத்துக்காட்டி அவர்கள் சந்தேகத்தைப் போக்குகிறார்.

மேலும் குருக்களின் தவறான போக்கைக் கண்டனம் செய்கிறார். குருக்கள் பலி ஒப்புக் கொடுக்கவும், இறைவனது சித்தத்தை மக்களுக்கு விளக்கிக் காட்டவும் இறைவனால் நியமிக்கப்பட்ட பணியாளர்கள். ஆனால் இஸ்ராயேலரின் குருக்கள் குறைபாடுள்ள மிருகங்களைப் பலியிட்டனர். சடங்குகளை மனம் போன போக்கில் கவனமற்ற முறையில் செய்து பீடத்தை இழிவு படுத்தினர். இறைவனை அவமதித்தனர். குருக்களின் இத்தகைய போக்கை மலக்கியாஸ் கண்டிக்கிறார். "உங்கள் கையிலிருந்து காணிக்கை எதுவும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்கிறார் ஆண்டவர் என்று கூறிக் குருக்களைத் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யும்படி கேட்கின்றார்.

மேலும் "கதிரவன் எழும் திசையிலிருந்து மறையும் திசை வரையில் மக்களினங்கள் நடுவில் நம் திருப் பெயர் பெருமை மிக்கது. எங்கெனும் நம் திருப் பெயருக்குத் தூபமும் தூய காணிக்கையும் செலுத்தப்படுகின்றன (1 : 11) என்ற வசனமானது பழைய ஏற்பாட்டின் நிறைவற்ற பலியை விட புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் நிறைவான பலியை, திருப் பலியைக் குறிப்பிடுவதாக இருக்கிறது. —இ. சா. பங்கிராஸ

அறிந்துகொள்ளுங்கள் 93

## உபாகமம்

சட்ட நூல்களில் கடைசி நூல் உபாகமம். இந் நூல் எபிரேயத்தில் "இவை சொற்கள்" என்ற பெயரால் அழைக்கப்பட்டது. ஏனெனில் இந் நூல் மோயீசனது தூண்டுதல் கொண்ட அரசியல், சமய, சமூக அமைப்புகள் பற்றிய சட்டங்களைக் கொண்டுள்ளது. எழுபது நூல் இதை "இரண்டாவது சட்டம் என்று அழைத்தது. தமிழில் "உபாகமம்" என்று அழைக்கிறோம்.

எமது கையில் உள்ள வடிவத்தில் யோசியாசின் ஆட்சிக் காலத்தின் பின் கிடைத்தது யோசியாசின் ஆட்சிக் காலத்தில் (கி. மு 640 – 609) சமய சீர்திருத்தத்தோடு தொடர்டையது என்று அறிஞர் ஏற்றுக் கொள்வர். யோசியாஸ் அரசன் காலத்தில் ஆலய சீர்திருத்த நேரத்தில் ஆலய ஊழியருக்கு கூலி கொடுக்க ஆலயக் கருவூலத்திலிருந்து பணம் எடுக்கும் போது பெரியகுரு எல்கியாசு இதுவரை அறியப்படாத சட்ட நூலைக் கண்டெடுத்தார். இச் சட்டநூலைப் பின்பற்றி யோசியாஸ் சமய சீர்திருத்தத்தை தொடங்குகிறார் (2 அர 22:3–13) டிபெட்; வெல்ஹசன் போன்ற அறிஞர்கள் ஆலயத்தில் இச் சட்டநூல் கண்டெடுக்கப்பட்டபின் நடந்த சமயச்சீர் திருத்தத்திற்கும். உபாகமத்திற்கும் நெருங்கிய ஒற்றுமையுள்ளது என்று காட்டுகின்றனர்.

உபாகமம் வர அடசில் (இஸ்ராயேலில்) வாய் மொழிப் பாரம் பரியமாகத் தோன்றி காலப்போக்கில் எழுத்து வடிவம் எடுத்திருக்க வேண்டும். சமாரியாவின் வீழ்ச்சிக்குப் பின் (கி. மு. 721)

தென் நாட்டிற்கு (யூதேயாவுக்கு) வந்த அகதிகள் அதை கொண்டு வந்தனர் தென் நாட்டை எசெக்கியாசு ஆண்ட பொழுது (கி. மு. 716 - 617) யாவே பாரம் பரியமும் ஏலோயி பாரம் பரியமும் இணைகிறது. இதனால் ஒரு புதுப் பாரம்பரியம் தோன்றியது. அதில் நகல் ஒன்று எடுத்து ஆலயத்தில் வைக்கப்பட்டது. இதுவே யோசியாஸ் காலத்தில் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டது நூல்.

இந்நூல் உபாகமக்குழுவாலும், எரேமியாசு போன்றவர்களாலும் வளர்க்கப்பட்டது. பின் தென் நாடு பிடிபட்டு நாடு கடத்தப்பட்டபோது பல செய்திகள் இப்பாரம் பரியத்தோடு சேர்க்கப்பட்டது. எனவே இந்நூல் வர அடசைச் சார்ந்த ஏலாயீம் பாரம் பரியத்தைச் சேர்ந்தது. உபாகமப் பாரம்பரிய வரலாறு கி. மு. 562ல் "எவில் மெரோதக்" பபிலோனில் அரியணை ஏறும் வரை நீளுகிறது. —இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக அன்பர்களே!

"உப்பைத் தின்றவன்- தண்ணீர் குடிப்பான் தப்புசெய்தவன் தண்டனை கொள்வான் ஒப்புக்கொண்டவன் ஞானம் பெறுவான்" என்ற கவிஞனின் வார்த்தையை அடிக்கடி கூறி வருகின்றேன்! ஏன்? நமது மனச்சாட்சியை அடிக்கடி உலுப்பிவிடுகின்ற சிந்திக்க வைக்கின்ற கேள்விக் கணைகள் இவை. இத்தோடு நின்றுவிடாது முதுமொழியாளர் ஆழ்ந்து சிந்தித்துக் கூறியவை இப்படி!

"பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் இடையாது" என்று இதற்கு திருநூல் என்ன எதிர்க்குரல் எழுப்புகின்றது என்று தானே கேட்க ஆசிக்கின்றீர்கள்?

"பொய்ச்சாட்சி சொல்லுகிறவன் தண்டனை அடையாமல் இரான். தவறுகளைப் பேசுகிறவனும், தப்பிக்கொள்ளான்." என்று 19/5 இல் கூறுகிறது.

இன்னொன்று கூறட்டுமா?

"சேர் இடம் அறிந்து சேர்" என்ற முதுமொழியை நீங்கள் அடிக்கடி படித்திருப்பீர்கள். இதற்கு உதாரணமாக "மண் பானையும்- பித்தளைப்பானையும், வெள்ளப்பெருக்கிலே அடியுண்டு சென்றபோது பித்தளைப்பானை மண்பானையைப் பார்த்து 'நண்பா! கூடிக்குலாவிச் செல்வோம் வா' என்று கூப்பிட்டபோது, வெள்ளம் உன்னை அடித்து என்னில் மோதினாலும் உடைபவன் நானே, என்னை அடித்து உன்னில் மோதினாலும். உடைபவன் நானே" என்று கூறி தப்பித்துக்கொண்ட கதையை நீங்கள் சிறு வயதில் படித்திருப்பீர்கள் தானே!

இப்படியிருக்காமல் எதிர்மாறாக- புத்தி ஜீவிகளாக நாம் வாழவேண்டுமென்பதை இடித்துரைக்கும், இறைவாக்கு 19/6 இல் துடித்தெழுந்து கூறுகிறது இப்படி!

"வல்லவனை வணங்குபவர் பலர். நன்கொடை கொடுப்பவனுக்கு நண்பர் பலர் உண்டு',

ஓத்து ஊதும் நம் முன்னோர் 'தேன் இருக்கும் இடத்தைத்' தேடி மொய்க்கும், வண்டு" என்றும் "பழமரம் நாடும் பறவையைப் போல" என்றும் உரைக்கிறார்கள்.

சிந்தியுங்கள்- சந்திப்பேன்!

### வாரம் ஒரு சிந்தனை

"வயலில் உள்ள களைகளை களைந்தால் மட்டும போதாது! பயிர் வளர உரமும், இடவேண்டும்."

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்

### சந்தா

பாதுகாவலன் பத்திரிகையைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள ஒரு ஆண்டுக்கான சந்தா ரூபா 75/- மட்டுமே ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு ஆண்டு சந்தா 30 U.S. "பாதுகாவலன்" அ.பெ இல.2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நீங்கள் பணத்தை அனுப்பினால் வாரம் தவறாது பத்திரிகை உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். (ஆ-ர்)

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 38 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

அன்புக் கண்மணிகாள் !

கண்மணிகளின் ஆக்கங்கள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. இன்னும் இடம் தந்தால் நன்று, விலை கூடினாலும் பரவாயில்லை என்ற எண்ணங்கள் பலரிடம் தோன்றி, எழுத்துரு பெற்றும் வருகின்றன உங்கள் எண்ணங்கள் நிறைவேற குழந்தை யேசுவை வேண்டுங்கள். திருக்குறளும், விவிலியமும் போட்டி 4 அடுத்த சுடரில் வரும்.

அன்பின் அன்பு விழி

### அங்கத்துவம்

234. ஆ. ஏபிரகாம் 8 புனித லூசியா றே. க. த. க. வி. பள்ளிமுனை.
235. லோ. கி. யூட்றியன்சி 8 புனித லூசியா றே. க. த. க வி. பள்ளிமுனை.
236. யு. அன்ரன் 8 புனித லூசியா றே. க. த க வி. பள்ளிமுனை.
237. த. பற்றிக் டெனுட் 8 புனித லூசியா றே. க த க. வி. பள்ளிமுனை.
238. சூ. அ.லகோன்ஸ் 7 புனித லூசியா றே. க த க. வி. பள்ளிமுனை.
239. இ. ஜெ. பி. ஜான்சன் 7 புனித லூசியா றே க. த க. வி. பள்ளிமுனை.
240. சூ. கி. லெ. பெரேரா 7 புனித லூசியா றே. க, த. க. வி. பள்ளிமுனை.
241. T. றே. பி. பெரேரா 7 புனித லூசியா றே. க. த. க. வி. பள்ளிமுனை.
242. ஞா. அ. றெயினேல்ட் 7 புனித லூசியா றே க. த. க. வி. பள்ளிமுனை.
243. A. அ. சுஜிதா 9 யாழ். கன்னியர் ம. ம வி.
244. J. பிறின்ஸிப் 7 தாளையடி றே க. த. க. பாடசாலை.
245. A. அ. பேபிதா 6 தாளையடி றே. க. த. க. பாடசாலை.

### இயேசு பிரான் சிலுவை

அவன் அந்தக் கிராமத்தை அடக்கி ஆளும் அக்கிரமி. குடும்பங்களைப் பிரித்து வேடிக்கை பார்த்து, சுயலாபம் தேடும் துஷ்டன்.

இவனை பிஷப் பசில் சில்வெஸ்டர் தன்னைச் சந்திக்க வரும்படி அன்பானை கொடுத்தார். அவனும் அவரின் அழைப்பை ஏற்று அவர் அறையின் கதவைத் தட்டினான். கதவு திறபட்டது. அறைக்குள் செல்ல காலை வைத்தவன் திடுக்கிட்டு பின் வாங்கினான். தன் முன் தன் பாதையில் இருந்த குருதி சிந்திய இயேசுவைச் சிலுவையில் கண்டான், "குற்றச் செயல் புரியும் என் மகனே! உனக்குத் தைரியமிருந்தால் குருதி வடியும் இயேசுவை உன் காலால் மிதித்துவா" என்று ஆண்டகை கூறினார். அவனோ! உள்ளம் உருக கண்ணீர் மல்க, ஆண்டகையின் காலடியில் விழுந்து கதறி அழுது மன்னிப்புக் கோரினான்.

சூ. யூடிற் லலினி
அங். எண். 188

### மனித வாழ்வில் மறைக் கல்வி

இளமையின் பருவத்தில் மனிதரெல்லாம்
மறையறிவைக் கற்று இறைவனின்
அன்பை இவ்வுலகில் விளக்கிட
இறைவனின் வார்த்தைகள் இறப்பற்றவையென
புவியினில் பரப்பிட எழுக.
நீ பணி புரிய!

நில்லா உலகின் நிலைமா றியற்கையிலே
நலிவுறு பொல்லாத் தன்மையுடைச் சமூகமதிலே
எட்டுத் திசைதோறும் வன்செயல் மலிந்திடுதே
மனிதா நீயும் சமூகமதிலே கிறிஸ்துவின்
பிரதி விம்பமாய் சேவை யாற்றிட
மனித வாழ்வில் மறைக்கல்வி ஒளியேற்ற
எழுக நீ பணி புரிய!

ம. மேரிமலர்—அங். எண். 53.

# PATRICIAN INSTITUTES
## தொழினுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

1) **COMPUTER PROGRAMMING COURSE**

I. DATA PROCESSING & BASIC LANGUAGE
ஆரம்பம்– 04–11–89 மாலை 2 மணி (3 மாதகால பயிற்சி நெறி) (Week End Classes)
*Lecturers:-* Mr. N. Sundrarajah B Sc, (Eng) Hons (U.K) M. C. S.

PATRICIAN INSTITUTES AND BUSINESS PROMOTORS (Pvt) L.T.D } Joint Venture

II WORD PROCESSING
ஆரம்பம்:– 15–11–89 (6 மாதகால பயிற்சி நெறி)

III LOTUS 1–2–3 / SPREAD SHEET ANALYSIS
ஆரம்பம்:– 15-11-89 (6 மாதகால நெறி)
(Week Days Classes)
*Lecturers:–* Miss. M. VARATHARAJAH
Management Accountant Passed
Finalist C. T. M. A. (Lon.)
And
Mr. R. N. VARENDRAN A. C. A.
*EQUIPMENT USED:–* LASER ×7/2, ×7/3, 386 (I. B. M. Compatibles) and Apple II Computers

2) **DIPLOMA COURSE IN DRAUGHTSMANSHIP**
*Subjects:–* (i) Draughtsmanship Including Reinforced Concrete Detailing
(ii) Building Technology
(iii) Land Surveying (Theory & field work)
(iv) Builders Quantities & Estimating
*Duration:-* 6 months

3) **CITY AND GUILDS OF LONDON INSTITUTE QUANTITY SURVEYING**
PART I (6 Months PART II (6 Months)

4) **ELECTRICAL WIRING** – மின்சார இணைப்பு
(3 மாதகாலப் பயிற்சி நெறி)

5) **MOTOR MECHANISM** – மோட்டார் மெக்கானிசம்
(6 மாதகால பயிற்சி நெறி)

6) **MOTOR WINDING** – மோட்டார் வைண்டிங்
(4 மாதகால பயிற்சிநெறி)

7) **ARC WELDING** – மின் ஒட்டு வேலை
3 மாதகால பயிற்சி நெறி

8) **LATHE OPERATION** – கடைச்சல் இயந்திர இயக்கம்
(3 மாதகால பயிற்சி நெறி)

★ மேற்படி பயிற்சி நெறிகள் 01-11-89 புதன் கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
★ விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
★ கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

மேலதிக விபரங்கட்கு
Registrar
Patrician Institute of Higher Studies
59, St, Patrick's Road,
Jaffna. A/243


### விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி



P. J அமிர்தநாயகம்
[சம்பத்திரிசியார் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர்]
பிறப்பு: 22-02-1912 இறப்பு: 05-11-1988

திவ்விய யேசுவே! கல்வாரி அரசரே! உமது பாதையில் நாமெல்லோரும் செல்ல, உமது தாயாரின் தைரியத்தை எங்களுக்கு தாரும். உமது இரட்சணிய சிலுவையை மரணபரியந்தம் தழுவி, உமது அன்பின் அரவணைப்பில் மரித்த உமது அடியான், P.J அமிர்தநாயகம், நித்திய சமாதானத்தை அடைய செய்தருளும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பின்வரும் ஆலயங்களில் கீழ்க் குறிப்பிட்ட தினங்களில் பலிப்பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

அருள் ஆச்சிரமம் 04-11-88 சனிக்கிழமை மாலை 6-30. யா/ அடைக்கல அன்னை ஆலயம் 05-11-88 ஞாயிற்றுக்கிழமை காலை 7-00. பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயம் 07-11-88 செவ்வாய்க்கிழமை காலை 9-30

குடும்ப அங்கத்தினர்.
A/216

### மீளாத்துயிலின் 12-ம் வருட நினைவு



திருமதி.
S. அந்தோனியாப்பிள்ளை
[திருமதி. சின்னப்பு]
மலர்வு: 16-12-1933 மறைவு: 31-10-1978

சிறகிழந்த பறவையெனத்-
துணைவன் திகைத்து நிற்க,
தாய் முகங் காணாமல் -
சேய்கள் கண்ணீர் சொரிய,
உலையவிட்ட மெழுகு என -
உறவினர்கள் உருகி நிற்க,
உத்தமி அந்தோனியாப்பிள்ளை-
உலகை விட்டு சென்று
விட்டாய்,
ஆண்டவன் பதம் அணைந்து -
அடியவர்க்காய் வேண்டிடு
வாய்.

இவரது பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்.
A/238

### மீளாத்துயிலின் 6-ம் வருட நினைவு



அருட் சகோதரி மேரி அலோசியஸ்
மலர்வு: 5-1-1921 உதிர்வு: 29-10-1983

அன்பின் உறைவிடமாய்,
பண்பின் பிறப்பிடமாய்
துறவறத்தின் ஒளிவிளக்காய்
சமூகத்தின் நற்கனியாய்
வாழ்ந்து எம் வாழ்வு
வளம் பெற வழி செய்தீர்.

இவரின் பிரிவால் துயருறும்
T. சின்னப்பு, பிள்ளைகள்
A/239

### இரண்டாம் வருட நினைவு



வேதநாயகம் அன்ரன் மத்தியூஸ் தேவஞானேந்திரன்
பிறப்பு: 11-11-1948 இறப்பு: 4-11-1987

எல்லாம் வல்ல இரக்கமுள்ள இறைவன் இறந்து போன எமது சகோதரனுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிமையில் பேரின்ப வாழ்வு வழங்குவாராக!

அன்பான வாசர்களின் மன்றாட்டினை அன்புடனும், நன்றியுடனும் வேண்டுகின்றோம்.
A/2,1

### 31-ம் நாள் நினைவஞ்சலி



அ. ஜோ. எமிலியா ரோசா
(மெய்மா)
மலர்வு: 06-01-1902 உதிர்வு: 01-10-1989


"சீவியத்திலும் நேசித் தாம், மரணத்திலும் மறவோம்"

இரக்கம் நிறைந்த பிதாவே! மரித்த விசுவாசி திருமதி. அ. ஜோ. எமிலியா ரோசா அவர்களது ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை ஈந்தருளும், முடிவில்லாத பிரகாசம் அவருக்கு பிரகாசிக்க கடவது சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவரின் ஆன்ம சாந்திக்காக 31-10-1989 அன்று செவ்வாய்க்கிழமை தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 4-30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பரப்பிள்ளைகள்.
தாளையடி A/234

### 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பெ. சதீஸ் யோகேந்திரன்
அன்னையின்: மடியில் 07-05-1972
ஆழ்பவன்: பிடியில் 22-10-1987

அன்புக்கினிய நண்பனே! பண்பை இருப்பிடமாக கொண்டவனே! உன்பாசச் செயல்களால் பிறரைமகிழ்வித்தவனே! நீ மறைந்து ஈராண்டு சென்றாலும் உன் நினைவு மங்காமல் துடிக்கின்றேன்.

உன்பிரிவால் வாடும்
அன்புக்கினிய நண்பன்

# வாசகர் கருத்து

வாரமொருமுறை மலரும் "பாதுகாவலனே" நீ எமக்கு காவலனாக எம்மை வழிநடத்திச் செல்லுகிறாய்! கிறீஸ்தவ விசுவாசத்தில் எம்மை உறுதிப்படுத்தி, நற்பண்பில் எம்மை வளர்த்துவரும் உனது பணி என்றும் வளர்க!

சிறப்பாக, வாரா வாரம். நடாத்தும் போட்டிகளால் எமது அறிவுக்கு உரமிட்டு வளர்க்கின்றாய். நின் சேவை உலகெங்கும் பரக்க நீ என்றும் வாழ்க!! உன்னுடைய ஒவ்வொரு பகுதிகளும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அம்சமாகவே உள்ளது. இவற்றைப் படைக்கும் எழுத்தாளர்களுக்கும் எம உளம் நிறைந்த நன்றிகள்.

S. ராஜா
யாழ்ப்பாணம்.

உமது வார்த்தையை முழுத் துணிவுடன் எடுத்துச் சொல்ல உம் ஊழியர்கட்கு அருள் தாரும்.

### விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி



சிமியோன் ஞானப்பிரகாசம்
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)
அவனியில்: 01-06-1909
ஆண்டவனில்: 30-09-1989

"இறப்பென்பது முடிவல்ல அது நிறைவாழ்வின் ஆரம்பம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 30-10-89 திங்கள் மாலை 6-30 மணிக்கு ஆனையூர் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
A/237


**எவர் சில்வர் தயாரிப்புகள்**

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றிலும் பார்க்க தரமாகவும். மலிவாகவும் தயாரிக்கப்பட்ட Rajz Brand தேவநற்கருணைப் பாத்திர (Ciborium), இரசப் பாத்திரம் (Chalcie), தேவநற்கருணைத் தட்டு. காணிக்கைப் பை, பீட அலங்கார விளக்குகள், பூ ஏந்தனங்கள் தூண்டா மணி விளக்குகள், தேவநற்கருணைக் கூடு (Tapernacle) இன்னும் பற்பல. காட்சி அறை:- S. A. தேவதாசன். சூராவத்தை, சுன்னாகம்.

பாதுகாவலன்
PATHUKAVALAN

## சான்று பகர்தலுக்குப் புதிய சவால்கள்

''பகட்டான விதத்தில் வழிபாடுகளிற் கலந்து கொள்வதும், வெறும் போதனையும், திருவுடைகளுமே சமய உணர்வுடைமை ஆகாது. நீதிமீது ஆர்வமும், மக்கள்மீது கருணையும், இறைவனோடு ஐக்கியமுமே சமய உணர்வுடைமையாகும்.''

உலக திருச்சபைகள் சங்கத்தின் ஓர் இயக்குநரான டாக்டர் சாமுவேல் அமிர்தம் மார்த்தாண்டம் என்னுமிடத்தில் செப்டெம்பர் 2-ம் திகதி நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் போதிய இறையியல் அறிவு காணப்படவில்லையென்றும் உள்ளார்ந்த ஆன்மிக வாழ்விலும் பார்க்க மேல்வாரியான விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

திருமதி ஜோய் ஞானதாசன் உரையாற்றுகையில் தனது திருச்சபை ஒரு குறிப்பிட்ட சிலருக்கே நன்மை செய்கிறது, ஆனால் எல்லா மட்டத்திலும் உள்ள மக்களுக்குப் பணி செய்வதாகக் காட்டிக்கொள்கிறது என்றார். பெண்களைப்பற்றி குறிப்பிடும் போது வரதட்சணையை எதிர்ப்பதாக கூறிக் கொண்டு அதே சமயத்தில் வரதட்சணையாகக் கொடுக்கப்படும் பொருள்களை ஆசீர்வதிக்கிறது என அம்முரண்பாட்டை எடுத்துக் காட்டினார்.

பேராசிரியர் ஞானதாசன் ஒரு வணங்கும் வழிபடும் சமுதாயத்தை, கற்பிக்கும் சமுதாயத்தை, துன்புறும், தியாகம் செய்யும் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனக் கூறினார்.

## வேதாகம வினாவிடைப் போட்டி -29

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 16-11-89 இற்கு முன் பாதுகாவலன் அ.பெ.இ. 2 யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள் பரிசு ரூபா 25/-

சரியான விடைகளும், பரிசு பெறுபவர் பெயரும் அடுத்த போட்டியும், 01-12-89இல்வெளிவரும். விடைகளை 2 சாமுவேல் (6—10) இல் காணலாம்.

### வினாக்கள்

1) சீபா யாருடைய வீட்டு வேலைக்காரன்?
2) நாகாசுவின் இறப்பைக் குறித்து தாவீது ஆனோனுக்கு ஆறுதல் சொல்ல தன் ஊழியர்களை அனுப்பிய போது ஆனோன் அவர்களுக்குச் செய்த கொடுமை என்ன?
3) தாவீது பிலிஸ்தியரைத் தோற்கடித்ததால் இஸ்ராயேல் மக்களுக்குக் கிடைத்த நன்மை என்ன?
4) தாவீதும், இஸ்ராயேல் மக்களும் பாவித்த இசைக்கருவிகள் என்ன மூலப்பொருளால் ஆனவை?
5) ஆகியோவிற்கு ஓசா என்ன உறவு முறையானவர்?

### போட்டி 28இன் சரியான விடைகள்

1) தனது ஆடையைக் கிழித்துக் கதறி அழுததோடு மாலை வரை நோன்பு இருந்தான்.
2) ''வலியோர் வீழ்ந்தது எங்ஙனம்?
போர்க்கருவிகள் அழிந்தது எவ்வாறு?''
3) மரண தண்டனை.
4) 33 ஆண்டுகள்.
5) காபாவோன் பாலைவனம்.

பரிசுபெறும் நற்பேறுளர் :
செல்வன்- குணசேகரம் யூட்ரிறேன்
சில்லாலை
பண்டத்தரிப்பு

☐ ☐ ☐

பாராட்டுப் பெறுவோர்

செ. இமாக்குலெற், J. வதனி ராஜன் குலாஸ், மாலாகுலாஸ், J. அகிலன் சொய்சா, P. நிக்சன் சோசை, அ. மரியதாசன் குலாஸ், ம. அன்னம்மா குலாஸ், J. கீதாஞ்சலி சோசை, பா. தர்மபாலன், J. தீபன் சொய்சா, J. மடோனு தீபாசொய்சா அ. அதிரியன் சோசை, G. V. அன்ரனி சேவியர், யேசுபாதம் அசுந்தா J. F. யேசுதாசன், டனேசா ஸ்ரீபன். வின்சன் அன்ரனற் அனுபா, F. நெப்போலியன், எ. அன்ரன் பாலசிங்கம், அ. கில்டா சிராய்வ, ஒணேறியஸ் சிராய்வ.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் பேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல: QB/ 1001/ 58/81

# பாப்பரசரின் வருகையையிட்டு முஸ்லிம்கள் அஞ்சத்தேவையில்லை

இந்தோனேசியாவுக்கு பாப்பரசர் வருகை தருவது சமயப் பிரசாரமாக மாறிவிடுமென முஸ்லீம்கள் அஞ்சத் தேவையில்லையென ஆளும் கட்சியைச் சேர்ந்த ஓர் பாராளுமன்ற உறுப்பினரான மார்சுகி தருஸ்மான் கூறியுள்ளார்.

பாப்பரசர் ஒரு நாட்டின் தலைவர் என்ற முறையில் அரசாங்கத்தினாலும் நாட்டின் சகல இனத்தவராலும் வரவேற்கப்படுவார். மதத்தலைவர் என்ற முறையில் அவரது வருகை கத்தோலிக்கருக்கு சமய முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கும்.

''இங்கு தங்கியிருக்கும்போது கத்தோலிக்கர் ஏனைய இனத்தவருடன் ஒருமித்து உரிமையுடன் பாப்பரசரைக் காணக்கூடியதாக இருக்கும். இது சம்பந்தமான செய்திகளைப் பிரசுரிப்பதில் பத்திரிகைகளுக்கு எந்தவித கட்டுப்பாடும் கிடையாது. முஸ்லீம்கள் பாப்பரசருக்கு எத்தகைய மதிப்பு அளிக்கிறார்கள் என்பதை இந்த விஜயம் ஊர்ஜிதம் செய்யும்'' என அவர் மேலும் கூறினார்.

இந்தோனேஷியா 86% முஸ்லீம் நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## 'நீதி ஞாயிறு' அன்று உண்ணாவிரதம்

அனைத்திந்திய கத்தோலிக்க சங்கத்தின் அழைப்பிற்கிணங்க ஆகஸ்ட் 18 ஆம் திகதியன்று ஹரிஜன கிறிஸ்தவர்களுக்குக் காட்டப்படும் பாரபட்சத்தை எதிர்த்துக் குருக்கள் கன்னியர் உட்பட ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். ஆகஸ்ட் 20 ஆம் திகதி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்றன.

இந்த விடயத்தை மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யும்படி மாநில அரசுக்கு உண்ணாவிரதமிருந்தோர் மகஜர் ஒன்று சமர்ப்பித்தனர்.

# புத்தூக்க பயிற்சி வகுப்புகள்

மன்னார் மாவட்டத்துக்கு க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு உதவும் முகமாக ம. து. ம. ச. மன்னார் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உதவியுடன், 750 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிகளை அளித்து வந்துள்ளது. இக்கல்வி உதவித் திட்டத்திற்கு யாழ்/பல்கலைக் கழக கல்விமான்கள், பேராசிரியர் போன்றோர் உதவி புரிந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பாடநெறிகள் புனித/சவேரியார் பெண்கள் கல்லூரியிலும், மகாவித்தியாலயத்திலும் இடம்பெற்றுள்ளது. பொருளியல் பாடங்களை திரு. எஸ். பேரின்பநாதன், திரு. பா. சிவநாதன், செல்வி. சி அம்பிகாதேவி போன்ற யாழ்/பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், வர்த்தகம் பாடத்தை திரு. ஜெயராமும், விலங்கியல் பாடங்களை திரு. மோகனகுமார், திரு. தில்லைநாதனும், பௌதீகவியல், பிரயோக கணிதம் போன்ற பாடங்களை திரு. ஏ. ஞானதாஸ், திரு. என் பேரானந்தரூபன் போன்றோரும் நடாத்தினர்.

இப்பாடநெறிகளின்போது மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து க. பொ. த. உயர்தர மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் தலைவர், வண. பிதா அ. சேவியர் குரூஸ் இப்பாடநெறிகளை ஆரம்பித்து வைக்கையில் இம்மாவட்டம் கல்வியில் பின்தங்கி இருந்தபோதிலும் அயல்மாவட்ட பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், இறுதியாண்டு மாணவர்கள் போலச் சேவை மனப்பான்மையுடன் தொண்டுசெய்ய வந்தது பாராட்டக் கூடிய தொன்றாகும் என்றார்.

இத்திட்டம் சம்பந்தமாக ம. து. ம. ச. செயலாளர் திரு. சின்கிலேயர் பீற்றர் எமக்கு மேலும் தெரிவிக்கையில் இச் சங்கம் கல்விக்காக பெரும் தொகை பணத்தை வருடா வருடம் செலவழித்து வருவதாகவும், கூடிய செதியில் க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு மாவட்ட ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மீட்டல் பரீட்சைகளை நடாத்த உள்ளதாகவும், இதனால் இம்மாவட்ட மாணவர்கள் பயனடைய உள்ளதுடன் க. பொ. த. உயர்தர பரீட்சை எழுத ஊக்குவிப்பதாக அமையும் என்றார். இதற்கு ஒத்துழைப்பு நல்கிய சகலருக்கும் குறிப்பாக மன்னார் பல்கலைக் கழக மாணவன் செல்வன். கஸ்டன் பெனடிக்குக்கு சங்கம் நன்றி கூறுகின்றது.

சிங்கிலேயர் பீற்றர்.
செயலாளர்,
ம. து. ம. ச.

## சமய பாடநெறி முழுமையான கல்வியை அளிக்கிறது

சமய பாடத்தை பாடசாலைப் பாடங்களுள் ஒன்றாக வைத்திருப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் போது அரசு சமய பாடத்தை முழுமையான கல்வியை அளிக்கும் பாடம் என்பதை உணர வேண்டுமென சிங்கப்பூர் பேராயர் யொங் சூல் நீயன் ஆசிரியர்களுக்குப் பரிசளிக்கும் விழாவொன்றில் கூறினார்.

''எமது மாணவர்கள் சிங்கப்பூரின் நற்பிரசைகளாயிருந்தால் போதாது, இறையரசின் நற்பிரசைகளாகவும் இருக்க வேண்டும். திருச்சபை முழு மனிதனையும் உருவாக்கும் நோக்குடனேயே கல்வி பயிற்றி வந்துள்ளது. கல்வியில் உயர் தகுதி பெறும் அதேவேளையில் வாழ்வின் ஆன்மீகப்பரிமாணத்தையும் அசட்டை செய்யாதிருக்கும்படி அவர்களுக்கு பயிற்றப்படுகிறது. எமது முன்னாள் மாணவருள் அநேகர் எமது பாடசாலையில் கற்பிக்கப்பட்ட மறை அறிவை மேலாக மதிக்கின்றனர்'' என பேராயர் நீயன் கூறினார்.

## ஒதுக்கலைப் பற்றி வீடியோ படம் மட்டும் போதாது

திருச்சபையின் நீதி சமாதானத்திற்கான சபை கியோட்டோ நகரில் கருத்தரங் கொன்றை நடத்தியது. ஜப்பானில் ஒதுக்கப்பட்ட இனத்தினர்க்கு வேறுபாடு காட்டப்படுவதை அகற்றுவதற்கு வழிவகைகளை ஆராய்வதே இதன் நோக்கமாகும்.

ஒதுக்கல் பற்றிய இரு வீடியோ படங்கள் இங்கு விமர்சிக்கப்பட்டன. தம்மையறியாமல் ஒதுக்கலில் தாம் ஈடுபடுவதை இவை மக்களுக்கு உணர்த்துமா என ஆராயப்பட்டது. கருத்தரங்கில் பங்குபற்றிய 50 பேரும் முதலாவது படம் ஒதுக்கப்பட்டோரின் துன்பங்களைக் காட்டும்படி தயாரிக்கப்படவில்லையென்றும், இரண்டாவது படம் பார்ப்போரின் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியதாயில்லை என்றும் அபிப்பிராயப்பட்டனர்.

தம்மிலுள்ள வேற்றுமையுணர்வுகளை கண்டுபிடிக்க வீடியோ படங்களைப் பார்ப்பது போதாது, உரையாடலும் வழிகாட்டுதலும் தேவை என அபிப்பிராயப்பட்டனர்.

# உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்